மைசூர் மாநில ஆளுநர் மாண்புமிகு திரு. மோகன்லால் சுகாடியா அவர்கள், பெங்களூர் தி. தி. தேவஸ்தான தகவலறிவிப்பு நிலையத்தின் 17-வது ஆண்டு விழாவை தொடக்கி வைத்துப் பேசிய போது பெங்களூரிலிருநது திருமலைக்கு நேரடி பேருந்து போக்குவரத்து ஒன்றை செயல்படுத்த தம்மால் முடிந்த வரை முயற்சி செய்வதாகக் கூறினார். இவ் விழா 1—5—73 அன்று பெங்களூர் நகர அரங்கில் நடைபெற்றது.

பக்தர்களிடையே ஒரு பரந்த மனப்பான்மையினை ஏற்படுத்துவதில் தி. தி. தேவஸ்தானம் கொண்டுள்ள ஈடுபாட்டினை ஓா உதாரணமாகக் கொண்டு மற்ற அறநிலைய, கோயில் நிருவாகங்கள் செயல்படவேண்டும் என்று தாம் விரும்புவதாக, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டார்.

விழாவிற்கு தலைமை தாங்கிய, கல்வி அமைச்சர் மாண்புமிகு ஏ. ஆர். பத்ரி நாராயணன் அவர்கள் தம் தலைமை உரையில், ஆளுநர் அவர்களின் கருத்தை மேலும் வலியுறுத்திப் பேசினார்.

வட்டார ஆலோசனைக்குழுவின் தலைவரான திரு. வி. ஆர். நாயுடு அவர்கள் கூட்டத்தினரை வரவேற்றார்.

தி. தி. தேவஸ்தான செயலாட்சித் தலைவரான திரு. எஸ். வி. சுப்ரமணியன் அவர்கள் சுப்ரபாத போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கினார். மேலும் அவர் ஆளுநர் அவர்களின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில், திருமலைக்கு தனியார் பேருந்து போக்குவரத்தை அனுமதிக்கக் கூடாது என்று தேவஸ்தான மேலாண்மை ஒரு முடிவு எடுத்துள்ளதால், பெங்களூரிலிருந்து வருபவர்களை திருப்பதியில் ½ மணி நேரத்திற்குமேல் காத்திருக்கச் செய்யாமல் திருமலைக்கு செல்ல தகுந்த ஏற்பாடுகள் மட்டுமே செயல்படுத்தலாம் என்று கூறினார்.

தி. தி. தேவஸ்தான பொறுப்பாண்மைக் குழுவிற்குப் பதிலாக, சிறப்பு அதிகாரியாக செயலாற்றி வரும் சித்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரான திரு. ஏ. வள்ளியப்பன் அவர்கள் திருவேங்கடவன் உருவப்படங்களை, சிறப்பு விருந்தினர்களுக்கு வழங்கினார்.

குமாரி பத்மஸ்ரீ அவர்களும், திரு. பி. பி. ரேவண்ணா அவர்களும் விழாவில்பேசினார்கள்.

ஸ்ரீ கோவிநதராஜ சுவாமிகளின் புதிய தோ

திருவலம ஸ்ரீசிவானந்த மௌன சுவாமிகளின் மேற்பார்வையில் மூன்று இலட்சம் ரூபாசெலவில் கட்டப்பட்ட, கோவிந்தராஜ சுவாமிகளின் புதிய தோ 7—5—73 அன்று திருப்பதியில் வெள்ளோட்டம் விடப்பட்டது. ஸ்ரீசிவானந்த மௌன சுவாமிகள் விழாவை மேற்பார்வையிட்டார். ஸ்ரீ கோவிந்தராஜ சுவாமிகளின் உருவப்படம் அமைந்த இப் புதிய தேரின் வெள்ளோட்ட ஊர்வலத்தில், இரணடாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொணடனர்.

தி. தி. தேவஸ்தான செயலாட்சித்தலைவர் திரு. எஸ். வி. சுப்ரமணியன் அவர்களும், வேறு பல அதிகாரிகளும் இவ்வூர்வலத்தில் கலந்து கொணடனர்.

துவாரகா திருமலையில் தி. தி. தே. சத்திரம்

ஆந்திர மாநில, மேற்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள துவாரகா திருமலையில் ஒரு புதிய சத்திரத்தை, தி. தி. தேவஸ் தானம், அண்மையில் திறந்து வைத்தது. மேற்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள பீம டோலு என்ற இடததிலிருநது 12 கல் தொலைவிலுள்ள திருவேங்கடவன் உறையும் துவாரகா திருமலை, திருப்பதியில் இருக்கும் திருமலை போலவே, ஒரு மலை வாழ் ஸ்தல மாகும். தென்மத்திய இரயில்வேயின் விஜய வாடா-வால்டேர் பாதையின் அருகே உள்ள பீமதோலு இரயில் நிலையத்திலிருந்து தினசரி பேருந்து போக்குவரத்து வசதிகள் உள்ளன. ஏழுமலையான் வாழும் திருமலைக்கு யாத்திரை செய்ய முடியாதவர்கள் இப்புனித இடத் தில் தங்கள் வேண்டுதல்களை, நிறைவேற்றிக் கொள்வார்கள்.

ஸப்தகிரி இதழகள் மட்டுமல்லாமல் இங்கு தி. தி. தேவஸ்தான வெளியீடுகளும, திரு வேங்கடவனின் பல்வேறு அளவுகளைக் கொணட வண்ணப்படங்களும் விற்பனைக்குக் கிடைக்கும்.

இந்தப்புனித தலத்திற்கு, பக்தர்கள் வருகை புரிந்து, இங்கு கோயில் கொண்டுள்ள பெருமானின் தரிசனத்தைப் பெறுவார்கள் என்றும், மேலும் இங்குள்ள தி. தி. தேவஸ் தான சத்திரத்தை அவர்கள் நன்முறையில் பயன்படுத்திக கொள்வார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம்

சிததூர் தகவலறிவிப்பு நிலையம

1-5-73 லிருநது, சிததூரிலுள்ள (ஆந்திர மாநிலம்) தி. தி. தேவஸ்தான தகவலறிவிப்பு நிலையம் மூடப்பட்டது.

ஜகசர்லா (ஆந்திர மாநிலம்) திருவேங்க டேஸ்வரசுவாமி கோவிலிலுள்ள தி. தி. தேவஸ்தான தகவலறிவிப்பு நிலையமும் மூடப் பட்டது

திரு. சி. சிட்டிபாபு

புகழ்பெற்ற வீணை வித்துவான திரு. சி. சிட்டிபாபு அவர்கள தி தி. தேவஸ்தான ஆஸதான வித்வானாக நியமிக்கப்பட்டார்.

வேறு செய்திகள்

கீழ்வரும் கோயில்களின் செயலாட்சித் தலைவர்களின் பதவிகளை, அறநிலைய உதவி ஆணையாளர்கள் என்ற பதவிகளாக ஆந்திர மாநில அரசு உயர்த்தியுளளது.

1. ஸ்ரீ வெங்கடேஸ்வரசுவாமி கோயில், துவாரகா திருமலை.
2. ஸ்ரீ சீதாராமசந்திரசுவாமி கோயில், பத்ராசலம்.
3. ஸ்ரீ துர்கா மல்லேஸவரசுவாமி கோயில், விஜயவாடா.



திருமால் தசாவதாரம்

திரு தா. செ. இரகுபதி, M.A.,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி.



துதி

என்னாளும் உன்னடியார் ஏற்றித் துதிபாடப்,
பொன்னனை தாமரையாள் போற்றிதொழ-மன்பதையில்
இன்புற வேங்கடநின் இவ்வதா ரம்பத்தும்
புன்பொருள்நான் பாடப் புகல்.

1. மச்சாவதாரம :

அச்சாக நின்றுதவி அறங்கள் கூறும
ஆழமிகு மறைகளினை ஆழிக் குள்ளே
துச்சமென எண்ணிதினம் தூக்கித் தூக்கித்
துவணடோடும் அலைகடலில் வீசிப் போட்ட
அச்சமிலா அரக்கனையே கொன்று, என்றும்
அறம்வாழ வழிசெய்தாய் இறைவ! போற்றும்
மச்சவதா ரத்தோய் ! உன் மகிமை போற்றி !
மங்களமும பெருகிடவே போற்றிப! போற்றி!

2. கூர்மவதாரம் :

பார்சுற்றி அலைந்தே யாடும்
பரவையும் கலங்கும் வண்ணம்
சீர்பெற்று அவுணர் தேவர்
சிறப்புற வாழ, என்றும்
ஊர்க்கருள் புரிய, மாலே !
உயர்மலை மத்தைத் தாங்க
கூர்மவ தாரம ஏற்றாய் !
குவலயம் காத்தாய் போற்றி !

(பரவை — கடல், குவலயம் — உலகம்.)

3. வராக அவதாரம் :

வாழவழி காட்டும்நல் வேங்கடனே! பொங்கும்
ஆழமிகு கடலுக்குள் அகிலத்தைப் பாயாய்த்
தாழசெல சுருட்டியொரு கொடுவரக்கன் தள்ளக
கேழலுரு ஏற்றருளிக் காத்தாய்நீ போற்றி!

(கேழல் — வராகம்)

4. நரசிங்க அவதாரம் :

வானிடை மண்ணின் மீதில்
வரத்தினால் ஆற்றல் பெற்றுக்
கானிடை வாழு மந்த
கடுநதிடும் மதயானைப்போல்
நானிடு அகங்கா ரத்தால்
நடநதிட அரக்க மன்னன்
மானிட மடங்க வாய்ப்போய்
மாய்த்தனை! மாலே! போற்றி!

(மானிட மடங்கல் — நரசிங்க அவதாரம்)

5. வாமன அவதாரம் :

நாமம் போற்றி! நன்மை ஆற்றும் வேங்கடா!
சோம பானம் சுவைத்து வாழ்ந்த மன்னனின்
நாமம் கூறி, நசுக்கி, மண்ணை விண்ணினை
வாம னாக வேற்ற ளந்தாய்! போற்றியே!

6. பரசுராமர் அவதாரம் :

அரசார்தவ யமதங்கியின் அஞ்சாவலி துஞ்சா
சிரசார்முடி வேந்தர்தமைச சிதைத்தேமுடி செகுத்தே
முரசார்தரு கடல்சூழ்படி முந்தேவலம் வந்த
பரசாம்படை ராமா வெனும திருவேங்கடா போற்றி!

7. இராமர் அவதாரம் :

தரணியினைத் தம்பிக்குத் தயரதனின் சொற்கேட்டுத்
தந்து விட்டுக்
கரத்தினிலே காண்டீபம் கொண்டந்த இராவணனின்
கழுத்தைச் சீவி
நரகத்தில் வீழ்த்தியெழில் சீதையினைச் சிறைமீட்டு
நல்லோ ரெல்லாம்
சிரம்தாழ்த்த மாலேநீ இராமனெனும் அவதாரம்
செய்தாய் போற்றி.

8· பலராம அவதாரம் :

அலைமோதும் கடல்சூழ்ந்த அவனியினை
அறத்தோடு அந்நாளிலே
குலையாத வலிவோடு படைகொண்ட
பலராம னுயாண்டனை !
கலைமேவும் அடியார்மேல் கழியாத
கருணையொடு இந்நாளிலும்
மலைமீது அமர்ந்தோங்கி வளமீந்தாய் !
மாலேயுன் அருள்போற்றியே !

9. கிருஷ்ணுவதாரம்

வீழும பாழபுவி தன்னில வேங்கடா ! விந்தை கோகுலக் கண்ணனுய்
வாழும் ஆசையால் வந்து நீபுரி மாய வித்தைகள் எத்தனை ?
பாழும் ஆசையால் மைந்தன் திமணல் தின்னப் பார்த்தய சோதைக்கு
ஏழு மாபுவி ஏழு மாகடல் காட்டினுயுனைப் போற்றினேன்.

10. கல்கி அவதாரம் :

மல்கு நீதி மல்கு தர்மம்
மற்று நேர்மை யாவையும்
அல்குங் காலை வேங்க டத்தில்
ஆலும் எங்கள் வேங்கடா !
மல்கு நீதி அன்பு யாவும்
மாய மாய்க்கும் வீணரைக்
கலகி என்னும் பேரி னுகக்
காலம் காத்தோய் வாழ்த்தினேன்.



தைத்தரீய ஆரண்யகம்

॥ तैत्तरीयारण्यकम् ॥

(சூர்ய நமஸ்காரம்)

வித்வான் நடதூர ஸ்ரீ தேசிகாச்சாரியார்.

★ ★ ★

(முன் இதழ்த் தொடர்ச்சி)

அநுவாகம் – 13

१. अष्टयोनीमष्टपुत्राम् ।
अष्टपत्नीमिमां महीम् ।
अहं वेद न मे मृत्युः ।
न चामृत्युरघाहरत् ॥

பூமிதேவியின் மஹிமை

அஷ்டயோனீம் அஷ்டபுத்ராம |
அஷ்டபத்னீம இமாம் மஹீம் ||
அஹம் வேத ந மே ம்ருத்யுஃ |
ந ச அமருத்யுஃ அகாஹரத் ||க||

அஷ்டயோனீம் – எட்டுவித காரணங்களை உடையவளும், அஷ்டபுதராம் – எட்டு புதல்வர்களை உடையவளும், அஷ்டபத்னீம்– எட்டு திக்பாலகர்களை உடையவளும், ஆகிய, இமாம் மஹீம் – இநத பூமியை, அஹம்வேத ந – கிடையாது. அம்ருத்யு – அகால மரண மும், நச அஹத் – எனக்கு பாபத்தைச் செய்யாது (அந்த பாபம் ஏற்படாது).

இந்த மந்திரத்தை தியானத்தில் அறிந்த ஒரு மஹரிஷி பின்வருமாறு சொல்கிருர் :– பூமிதேவியானவள், பிருகிருதி, மஹத், அஹங்காரம், ஐந்து தன்மாத்திரைகள் ஆகிய எட்டுக் காரணங்களை உடையவள; (இவ்வாறு சாஸ்திரிய மதத்தில் கூறப்படுகிறது), மேலே கூறப்போகும் மித்திரன் முதலிய எட்டு புத்திரர்களை உடையவள். இந்திரன், அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசன், ஆகிய எட்டு திக்பாலகர் களை உடையவள். இத்தகைய பெருமை வாய்ந்த பூமி தேவியை நான் அறிவேன். அதனால் எனக்கு சம்சார பந்தமே விலகி விட்டது. எனக்கு அகால மரணத்தினுல் ஏற்படும் துன்பமும் உண்டாகாது. ஆகவே இந்த மநதிரத்தை ஜபம் செய்பவர்களுக்கும் அகாலமரணம் உணடாகாது.

२. अष्टयोनीमष्ट पुत्रम् ।
अष्टपदिद मन्तरिक्षम् ।
अहं वेद न मे मृत्युः ।
न चामृत्युरघाहरत् ॥

அஷ்டயோனீம் அஷ்டபுத்ரம் |
அஷ்டபத் இதம் அந்தரிக்ஷம் |
அஹம வேத ந மே ம்ருத்யுஃ |
ந ச அமருத்யுஃ அகா அஹரத் ||உ||

அஷ்டயோனீம் – எட்டுக் காரணங்களை உடையதும், அஷ்டபுத்ரம் – எட்டு புதல்வர் களை உடையதும், அஷ்டபத் – எட்டுவிதமான திக்பாலகர்களை உடையதுமான, இதம் – இந்த, அந்தரிக்ஷம் – நடு உலகத்தை, அஹம் வேத – நான் அறிவேன். ந மே ம்ருத்யுஃ – எனக்கு சம்சார பந்தம கிடை யாது, அம்ருத்யுஃ அகாஹரத் – இதை அறிந்தவனுக்கு அகால மரணம் ஏற்படாது, கிடையாது.

பூமிக்கும் சுவர்கத்திற்கும் நடுவிலுள்ள உலகத்திற்கு அந்தரிக்ஷ உலகம என்று பெயர். அதுவும, பூலோகத்தைப் போலவே எட்டு விதமான திக்பாலகர்களை உடையது. இதை அறிநத நான் முகதிப் பெறப் போகிறேன். இவ்விதம் அறிந்தவனுக்கும் அகால மரணம் ஏற்படாது.

சுவாக லோகம்

३. अष्टयोनीमष्टपुत्राम् ।
अष्टपत्नीमम् दिवम् ।
अहं वेद न मे मृत्युः ।
न चामृत्युरघा हरत् ।।

அஷ்டயோனீம் அஷ்டபுத்ராம் |
அஷ்டபத்னீம் அமும்திவம் |
அஹம் வேத ந மே ம்ருத்யு: |
ந ச அம்ருத்யு: அகாஹரத் ||ங||

அஷ்டயோனீம் — எட்டு காரணங்களை உடையதும், அஷ்டபுத்ராம் — எட்டு புத்திரர்களை உடையதும், அஷ்டபத்னீம் — எட்டு திக்பாலகர்களை உடையதுமான, அமும் திவம் — இந்த த்யுலோகம் என்ற சுவர்க்க லோகத்தை, அஹம் வேத — நான் அறிவேன், ந மே ம்ருத்யு: — எனக்கு இனி சம்சார பந்தம் கிடையாது, ந ச அம்ருத்யு: அகா அஹரத் — இதை அறிந்தவனுக்கும் அகால மரணம் ஏற்படாது.

சுவர்க்கலோகத்திற்கும், மேலே கூறிய படியே, எட்டுவிதமான காரணமும், எட்டு திக்பாலகர்களும், உண்டு. இதை அறிந்த நான் முக்தியை அடையப்போகிறேன். இதை அறிந்த மற்றவர்களுக்கும் அகால மரணம் ஏற்படாது. அவர்களும் நன்றாக வாழ்ந்து முக்தி பெறுவார்கள்.

४. सुत्रामाणं महीमूषु ।।

ஸுத்ராமாணம் மஹீம் ஊஷு || ச ||

இந்த மந்திரங்கள் இரண்டும் தைத்ரீய சம்ஹிதை முதல் காண்டம், ஐநதாவது பிரச்னம், பதினோருவது அனுவாகத்தில் உள்ளன. அவை முழுவதும் பின்வருமாறு:—

1. ஸுத்ராமாணம ப்ருதிவீம த்யாம அனேஹஸம்
ஸுசர்மாணம் அதிதிம் ஸுப்ரணீதிம
தைவீம நாவம் ஸ்வரித்ராமனுகஸம |
அஸ்ரவந்தீம் ஆருஹேமா ஸ்வஸ்தயே ||

2. மஹீமூஷு மாதரம் ஸுவ்ரதானும் ருதஸ்ய
பத்னீம் அவிஸே ஹுவே வ |
துவிக்ஷத்ராம் அஜரநதீம் உருசீம்
ஸுசாமாணம அதிதிம ஸுப்ரணீதிம் ||

இந்த இரண்டு மந்திரங்களின் முதல் சொற்களைமட்டும் இங்கே ஜபித்தால் போதும் என்று கருத்து,

அதிதியின் மகிமை

५. अदितिर्द्यौरदितिरन्तरिक्षम् ।
अदितिर्माता स पिता स पुत्रः ।
विश्वेदेवा अदितिः पञ्चजनाः ।
अदितिर्जातमदितिर्जनित्वम् ।।

அதிதி: த்யௌ: அதிதி: அந்தரிக்ஷம் |
அதிதி: மாதா ஸ பிதா ஸ புத்ர: |
விச்வே தேவா அதிதி: பஞ்ச ஜனா: |
அதிதி: ஜாதம அதிதி: ஜனித்வம் || ரு ||

அதிதி: — அதிதியானவள், த்யௌ: — சுவர்க்கலோகமாவும், அதிதி: அந்தரிக்ஷம் — அதிதியே நடு உலகமாகவும், அதிதி: மாதா— அதிதியே தாயாகவும், அதிதி: ஸ பிதா — அந்த அதிதியே தந்தையாகவும், ஸ: — அந்த அதிதியே, புத்ர: — புதல்வனாகவும், இருக்கிறாள். அதிதி:—அதிதியே, விச்வே தேவா:— எல்லா தேவர்களாகவும், பஞ்சஜனா — பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன்,

நிஷாதன் ஆகியவர்களாக இருக்கிறாள். அதிதிঃ ஜாதம் — அதிதியே ஏற்கனவே உண்டான பொருளாகவும், ஜனித்வும் — உண்டாகப் போகும் பொருளாகவும் இருக்கிறாள்.

அதிதியே சுவர்க்கலோகமாகவும், நடு உலகமாகவும், தாயாகவும் தந்தையாகவும் தனயனாகவும் இருக்கிறாள். அதிதியே எல்லா தேவர்களின் உருவமாகவும் இருக்கிறாள், அதிதியே அந்தணன், க்ஷத்திரியன், வைசியன். சூத்திரன், வேடன் ஆகிய ஐந்து மானிட ஜாதிகளாகவும் இருக்கிறாள். அதிதியே உலகத்தில் ஏற்கனவே உண்டாகியுள்ள பொருள்களாகவும் இனி உண்டாகப்போகும் பொருள்களாகவும் இருக்கிறாள். இவ்விதம் அதிதியின் மஹிமையை அளப்பதற்கு அரியதாகும்.

அதிதியின் புதலவர்கள்

६. अष्टौ पुत्रासो अदितेः ।
ये जातास्तन्वः परि ।
देवाँ ३ उपप्रैत् सप्तभिः ।
परा मार्ताण्डमास्यत् ॥

அஷ்டௌ புத்ராஸோ அதிதேঃ |
யே ஜாதாঃ தன்வঃ பரி |
தேவாம் (௩) உபப்ரைத் ஸப்தபிঃ |
பரா மார்த்தாண்டம் ஆஸ்யாத் ||௬||

யே — எவர்கள், அதிதேঃ — அதிதியினுடைய, தன்வঃ பரி — உடலிலிருந்து, ஜாதாঃ — பிறந்தார்களோ, தே புத்ராஸঃ — அந்த புதல்வர்கள், அஷ்டௌ — எட்டு பேர்கள், ஸப்தபிঃ புத்ரைঃ — ஏழு பிள்ளைகளுடன், அதிதி, தேவான் உபப்ரைத் — தேவர்கள் இருக்குமிடத்தை அடைந்தாள் மார்த்தாண்டம் — சூரியனை, பராஸ்யத் — விலக்கிவிட்டாள்.

அதிதி தேவியின் உடலிலிருந்து எட்டு புதலவர்கள் பிறந்தனர். அவர்கள் மார்த்தாண்டன் என்கிற பிள்ளையை மட்டும் விலக்கி விட்டு மற்ற ஏழு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு தேவர்கள் வாழும் சுவர்க்கத்திற்குச் சென்றாள்.

மார்த்தாண்டனை விலக்கியதற்குக் காரணம்?

७. सप्तभिः पुत्रैरदितिः ।
उपप्रैत् पूर्व्यं युगम् ।
प्रजायै मृत्यवे तत् ।
परा मार्ताण्डमाभरदिति ॥

ஸப்தபிঃ புத்ரைঃ அதிதிঃ |
உபப்ரைத் பூர்வயம் யுகம் |
ப்ராஜாயை ம்ருத்யவே தத் |
பரா மார்த்தாண்டம் ஆபரத் இதி ||எ||

அதிதிঃ — அதிதியானவள், ஸப்தபிঃ புத்ரைঃ — ஏழு புதல்வர்களைப் பெறுவதற்கு முன், பூர்வயம் யுகம்—புருஷனுடன் மகிழ்ச்சியுடன், உபப்ரைத் — சேர்ந்தாள், தத் — எட்டாவது பிள்ளையான மார்த்தாண்டன் என்பவன், ப்ரஜாயை — ஜனங்களுடைய, ம்ருத்யவே — மரணத்தின் பொருட்டுக் காரணமாகின்றான். ஆகையால், மார்த்தாண்டம் — மார்த்தாண்டனை, பராபத் — விலக்கி விட்டாள். இதி — என்று அறிய வேண்டும்.

அதிதி தேவியானவள் முதலில் கணவனுடன் சேர்ந்து வரிசையாக ஏழு பிள்ளைகளையும் பெற்ற பொழுது மகிழ்ச்சியடைந்தாள். ஏனெனில் அவர்கள் மக்கள் வளர்வதற்குக் காரணமாக இருந்தனர். எட்டாவது பிள்ளையான மார்த்தாண்டன் என்கிற சூரியன் உதயமாவதாலும் அஸ்தமனம் ஆவதாலும் மக்களுடைய ஆயுளைக் குறைப்பதால் அவர்கள் மரிப்பதற்கும் காரணமாகிறான். ஆகையால் அதிதியானவள்

மார்த்தாண்டனை மட்டும் விலக்கிவிட்டு மற்ற ஏழு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு தேவ லோகத்திற்குச் சென்று விட்டாள் என்பது கருத்து.

எட்டு பிள்ளைகளின பெயர்கள்

८. तान् अनुक्रमिष्यामः ।

தான் அனுக்ர மிஷ்யாமஃ ||அ||

தான் — அந்த எட்டு பெயர்களையும், அனுக்ரமிஷ்யாமஃ—வரிசையாகக் கூறுவோம்.

பூமிதேவியின் எட்டு பிள்ளைகளின் பெயர்களைக் கூறுவோம். அவைகளே அதிதி தேவியின் பெயர்களாகும்.

९. मित्रश्च वरुणश्च ।
धाता चार्यमा च ।
अँशश्च भगश्च ।
इन्द्रश्च विवस्वाँश्चेत्येते ।।

மித்ரஸச வருணஸ்ச |
தாதாச அர்யமா ச |
அம்சஸ்ச பகஸ்ச |
இந்த்ரஸ்ச விவஸவான் சேத்யேதே ||கூ||

மித்ரஃ ச, வருணஃ ச, தாதா ச, அர்யமாச, அம்சஃ ச, பகஃ ச, இந்த்ரஃ ச, விவஸ்வான் ச, இதி ஏதே — என இவர்களே புதல்வர்கள்.

மித்திரன், வருணன், தாதா, அர்யமா, அம்சன், பகன்' இந்திரன், விவஸ்வான் ஆகியவர்களே அந்த எட்டு பிள்ளைகள் ஆவர்.

१०. हिरण्यगर्भो हँसश्शुचिषत् ।
ब्रह्मजज्ञानं तदित्पदमिति ।।

ஹிரண்யகர்போ ஹம்ஸஃ சுசிஷத் |
ப்ரஹ்ம ஜ்ஞானம் ததித் பதம் இதி ||

(१) हिरण्यगर्भस्समवर्तताग्रे
भूतस्य जातः पतिरेक आसीत् ।
स दाधार पृथिवीं द्यामुतेमां
कस्मै देवाय हविषा विधेम ।।

ஹிரண்ய கர்பஃ ஸமவர்த்ததாக்ரே
பூதஸ்ய ஜாதஃ பதிரேக ஆஸீத் |
ஸதாதார ப்ருதிவீம் தயாம் உ தேஷாம
கஸமை தேவாய ஹவிஷா விதேம ||க||

—யஜுர்வேதம, 4–1–8,

(२) हँस· शुचिषत् वसुरन्तरिक्षसत्
होता वेदिषत् अदितिर्दुरोणसत् ।
नृषद्वरसत् ऋतसत् व्योमसत्
अब्जा गोजा ऋतजा ऋतं बृहत् ।।

—தைத்ரீய ஆரண்யகம், 10—வது பிரச்சன், 12வது அனுவாகம்.

ஹம்ஸயஃ சுசிஷத் வஸுரந்தரிக்ஷஸத்
ஹோதா வேதிஷத் அதிதிஃ துரோணஸத் |
ந்ருஷத் வரஸத்ருதஸத் வ்யோமஸத் அப்ஜா
கோஜா ருதஜா அத்ரிஜா ருதம் ப்ருஹத் ||உ||

(३) ब्रह्मजज्ञानं प्रथमं पुरस्तात्
विसीमतः सुरुचो वेन आवः ।
स बुध्निया उपमा अस्य
विष्ठाः सतश्च योनिमसतश्च दिवः ।।

ப்ரஹ்மஜ ஜ்ஞானம் ப்ரதமம் புரஸ்தாத்
விஸீமதஃ ஸுருசஃ வேன ஆவஃ |
ஸ புத்னியா உபமா அஸ்ய
விஷ்டாஃ ஸதஃ சயோனிம் அஸதஃ ச திவஃ ||ங||

—தைத்ரீய ஆரண்யகம், 10—வது பிரச்னம், முதல் அனுவாகம்.

(४) तदित्पदं न विचिकेत विद्वान् ।
यन्मृतः पुनरप्येति जीवान् ।
त्रिवृत् यत् भुवनस्य रथवृत् ।
जीवो गर्भो न मृतः स जीवात् ।।

ததித் பதம் ந விசிகேத வித்வான் |
யன் ம்ருத꞉ புன꞉ அப்யேதி ஜீவான் |
த்ரிவ ருத யத் புவனஸ்ய ரதவ்ருத்
ஜீவோ கர்போ ந ம்ருத꞉ ஸ ஜீவாத் ||ச||

—தைத்ரீய பிராம்மணம், 8—வது அஷ்டகம், 7—வது பிரச்னம், 10—வது அனுவாகம்.

இந்த நான்கு மந்திரங்களின் ஆரம்பச் சொற்களை மட்டும் இங்கே சொன்னால் போதும் என்று கருத்து.

பிராம்மண வாக்கியம்

११. गर्भः प्राजापत्यः ।
अथ पुरुषः सप्तपुरुषः ।।

காப்ப꞉ ப்ராஜாபத்ய꞉ |
அத புருஷ꞉ ஸப்த புருஷ꞉ ||கக||

ப்ராஜாபத்ய꞉ — பிரஜாபதியைச் சேர்ந்த, கர்ப்ப꞉ — கர்ப்பம் தரித்தல் முன்பு சொல்லப் பட்டது, அத — இனி, ஸப்த புருஷ꞉ — ஏழு சேவகர்களும், புருஷ꞉ — சூரியனும் அடுத்த அனுவாகத்தில் சொல்லப்படுகின்றனர்.

" ஹிரண்யகர்ப்ப꞉ " — என்கிற மந்திரத் தில முன்பு பரஜாபதி சம்பந்தமான கர்ப்பம் தரித்தல் கூறப்பட்டது. இனிமேல் அடுத்த அனுவாகத்தில் சூரியனும், அவருக்கு பணி புரிபவர்கள் போல் இருக்கும் நட்சத்திரம், மாதம், பட்சம், பருவகாலம், வருடம், பகல், இரவு ஆகிய ஏழு அபிமானி தேவர் களும் விளக்கமாகக் கூறப்படுகின்றனர். இவ்விதம் இந்த அனுவாகத்திற்கும் அடுத்த அனுவாகத்திற்கும் உள்ள தொடர்பை அறிய வேண்டும்.

பதிமூன்றுவது அனுவாகம் முற்றிற்று

(தொடரும்)

கவனிக்கவும்

மணியார்டர் கூபபனில (Money Orders) சந்தாத்தொகை அனுப்பும்போது, சந்தா நெம்பரைக் குறித்து அனுப்பவும். சந்தாதாரர்கள் தங்களுடைய நெம்பரை ஸப்தகிரி மாத வெளியீடு உறையில் (Cover) கவனிக்கவும்.

ஆசிரியர்:

ஆழ்வாரின் ஆனந்தக் களிப்பு

டாக்டர் கு. தாமோதரன், M.A., M.Lit., Ph. D., திருப்பதி.

★ ★ ★ ★

உலகில் காணப்பெறும் மக்கள் பலவகையினர். சிலர் எப்பொழுதும் மலர்ந்த முகத்தினராகவும் துன்பச் சாயலற்ற நிலையினராகவும் தோற்றமளிக்கின்றனர். நடைமுறையில் வந்துறும் பேரிடர்களையும் பொருட்படுத்தாது அன்னார் இன்பநிலையினராக உள்ளனர். வேறு சிலர் சிறுசிறு நிகழ்ச்சிகட்கும் மனம் உளைந்து ஏதோ மலையைத் தலையிலே தாங்கிக் கொண்டிருப்பவரைப் போன்ற தோற்றமளிக்கின்றனர்.

அண்மைக் காலத்தில் வாழ்ந்த ஒரு இந்து சமயத்துறவி சொன்னார். ''எப்பொழுது பார்த்தாலும் கவலை தோன்ற இருக்கின்றவர் பெரும் சிந்தனையாளரைப் போன்று தோற்றமளிப்பவர்தான் நல்ல துறவி-சமய அறிஞர் என்று நினைப்பது தவறு; அவர் இருக்க வேண்டிய இடம் மனக்கோளாறுடையவர் இருக்கும் மருத்துவ விடுதியே''. இந் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞரான பாரதியார் கருத்தின்படி 'பாவி' யார் என்றால் இதோ அவர்தரும் விடை; 'எப்பொழுதும் கவலையிலே மூழ்கியிருப்பான் பாவி' இது ஒரு புதுமையான விளக்கமன்றோ?

நாம போற்றி வணங்கும் பெரியார் ஆசாரிய பெருந்தகை-நம்மாழ்வார் என்கின்ற மாறனார் சிறந்த சமய தத்துவ அறிஞர். அத்தோடு மட்டுமல்ல. அவர் தனிப் பெருங் கவிஞருமாவார். அவர் தம் நூல்களில் பல இடங்களில் உள்ளமுருகி இறைவனை நோக்கி அவர் பாடும் பாடல்கள் உள்ளன. அவை படிப்பவர் உள்ளங்களை உருக்குவனவாக் அமைந்துள்ளன. 'கவிதை பொலிவு பெறுவது அவலத்தை வெளியிடுகையிலேயே' என்ற கருத்தும் உண்டு. ஆயினும் ஆழ்வார் மகிழ்ச்சி நிலையில் பாடவில்லையா? அத்தகைய கவிதைகள் யாவை என்ற எண்ணம் எழுந்தது? அவர் தம் மகிழ்ச்சி எத்தகையது? அது பெருகியது எப்போது என அறியும் போது ஓர் பேருண்மை தெரிய வந்தது. அதனை உங்களுடன் பங்கிட்டுக் கொளவதே இன்று என் நோக்கம்.

இறைவனால் மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார் இறைவனைக் கண்ட நிலையில் - அவனை அனுபவிக்கையில்—ஆனந்தம் கொள்வது இயல்பே. உலகினர் நிலைகண்டு ஆழ்வார் துன்ப மிக அடைகின்றார். அவர்பால் கருணை கொண்டு அன்னாரை நல்வழிப்படுத்தும் நோக்கோடு அவர்க்கு அறிவுரை பகர்கின்றார் அறிவுரை கேட்ட மக்கள் திருந்திய நிலை கண்டு தம் நோக்கம் நிறைவேறிய காரணத்தால் ஆழ்வார் இன்பம் எய்துகின்றார். அம் மகிழ்ச்சி பாடலிலும வெளிப்படுகின்றது. மற்றும் இறைவனையே நினைந்து நினைந்து போது போக்குகையில் அவனது குணம் செயல்களை எண்ணி எண்ணி ஆழ்வார் குதூகலம் கொள்வதும் காணப பெறுகின்றது. இமமகிழ்ச்சியே பெருக்கெடுத்து ஓடும் இடங்களும் உண்டு. இவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

இறைவன் - மாயவன் - தன்னோடு கலந்ததனால் அவனது அணி அழகையும் அவயவ அழகினையும் மகிழ்ச்சியோடு வெளியிடுகின்றார்

ஆழ்வார். இப்பாடல்களில் கண்ணபெருமானுடைய ஒளிமிக்க முடி, கைகளில் உள்ள சங்கு சக்கரங்கள், உடலில் உள்ள ஆரம், நூல இவை ஒளியுடன் திகழ்வதைக் கூறுகின்றார். மற்றும் அவன் அவயவ அழகையும் அடுத்து மொழிகின்றார். கண் — செந்தாமரைத் தடம், வாய் — செங்கமலம்; அடிகள் — செந்தாமரை; உடம்பு — செம்பொன் என்று பாடுகின்றார்.

'' அந்தாமத்து அனபு செய்து என
ஆவிசேர் அமமானுக்கு
அந்தாமவாழ முடி சங்கு ஆழி நூல ஆரமுள
செந்தாமரைத்தடம் கண் செஙகனிவாய
செங்கமலம்
செந்தாமரை அடிகள்; செம்பொன்
திருவுடம்பே.'' (2-5-1)

தாமம் என்பது இடம் — வைகுந்தம். வைகுந்தத்திலுள்ளார் அனைவர்பாலும் செய்யும் அன்பினை இவர் ஒருவர்பால் அவன் செய்தானும். இப்படிச் செய்தற்குக் காரணம் அவன் இவர்க்கு அம்மான் ஆகையாலேயே அவன் தனித்து வரவில்லை. தன்னை அடுத்த நித்ய சூரிகளோடு வந்தான் என்பதை அடுத்த வரியில் வரும் ஆழி நூல் இவை உணர்த்தும் என்பது ஆளவந்தார் கூறும் பொருள். எம்பெருமானுர் வேறு விசேடப் பொருள் கூறுவர். இவரோடு கலப்பதற்கு முன் இறைவனைப் போன்ற அவன் அணிகளும் ஒளியிழந்து காணப் பெற்றன. கலந்த பின் இறைவனைப் போன்றே அவையும் ஒளிப் பொருளாகிச் சத்தை பெற்றன என்கிறார் அவர். இவரோடு கலந்தபின் துன்பமெல்லாம் தீர இவரைப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில கண்கள் செந்தாமரைத் தடாகம் போன்று செவ்வை பெறறன. உபசார வார்த்தைகளைக் கூறிடும் அதரம் சிவநது கனிந்து செந்தாமரை போலே இருந்தது கண்ணின் பார்வைக்கும் புன்முறுவலுக்கும் தோற்றுவிழும் திருவடிகள் செந்தாமரை போன்றன. அடியில விழுந்தவர் அனுபவிக்கும் திருமேனி ஓட வைத்த பொன்னின் நிறமுடையதாயிற்று என்று பதசாரம் காணலாம்.

அத்தோடு மட்டுமல்லாமல் எல்லாப் பொருள்களும் தன்னுள் அடங்கப் பெற்றவனாய் இருக்கும் அவன் வடிவு மரகத மலையினை ஒத்து விளங்குகிறதென்கின்றார். மேலே கூறிய உவமைகள் கூட ஒப்பாள் என மறுத்து

'' அப்பொழுதைத தாமரைப்பூ கண்
பாதம் கை கமலம்''

என்று அப்பொழுதலர்ந்த தாமரையை ஒப்பாகக கூறுகின்றார் அதற்கு மேலும்

'' எப்பொழுதும் நாள திங்கள் ஆண்டு
ஊழி ஊழிதொறும்
அப்பொழுதைக்கு அப்பொழுது
என் ஆராவமுதமே. ''

என்று மிகச்சிறிய கணநேர அனுபவமானாலும் ஊழிக்கால அனுபவமானாலும் அது புதிது புதிதாக இருக்கின்ற தன்மையை அழகுற விளக்குகின்றார் ஆழ்வார். இஃது ஆழ்வார் இறைவனோடு கலந்த கலப்பால் பெற்ற மகிழ்ச்சியின் வெளிப்பாடு.

மற்றொரு திருவாய்மொழியில் (2-6) தான் பெற்ற நன்மைகளைக் கூறி மகிழ்க்கின்றார். பாடலே எளிய பாடல். அதனையே காண்போம்.

'' உன்னைச் சிந்தை செயதுசெய்து
உன்நெடுமாமொழி இசைபாடி ஆடி என்
முன்னைத் தீவினைகள் முழுவோ
அரிந்தனன் யான
என்னைச் சிந்தையினுள் இகழ்ந்த இரணியன்
அகல்மார்பம் கீண்டிவன
முன்னைக் கோளரியே! முடியாதது
என் எனக்கே? '' (2-6-6)

இனிமையாலே விடவொண்ணுதபடியாக இருக்கின்ற உன்னை இடைவிடாது நினைத்து, உன் பெருமை பொருந்திய எல்லையற்ற புகழை (திருவாய் மொழியை) இசையோடு பாடி மகிழ்ச்சியால் ஆடினேன்; அதன் பலனுக என்னுடைய பல காலமாகச் சேர்த்த பாவச் செயல்களை வேரோடே போககினேன் என்கின்ருர் இது நான் பெற்றது. உன்னை நெஞ்சினுல் இகழ்நத இரணியனது அகல் மார்வத்தைப் பிளந்த - எளிதிலே இழித்துப் போட்ட எனது கோளரியே - வலிய சிங்கமே! எனக்கு இனி முடியாதது என்ன உள்ளது? சிந்தையால் இகழந்தவர்களையே அவன் அழிக்கின்ருன் என்ற நயம் காணல் தகும்.

மேலும் பேசுகின்ருர்: முழு ஏழ் உலகும் உண்ட அவன் 'உகந்து வந்து அடியேன் உட் புகுந்தான்' என்கின்ருர்! அவன் வரவு உகப்பால் நிகழ்ந்தது. பெயரளவில் நடந்தது அன்று; 'அவன் இனி அகல்வானு மல்லன்' என்று கூறுகின்ருர். பிரிவு இல்லை என்பதாம். இதனுல் பெற்ற நன்மை இவர்க்கு மட்டுமன்று, பனை நிழல் போல அன்று; இவரைச் சேர்ந்தவருடைய தூறு மண்டியது போன்ற நோய்கள் பலவும் ஓட்டப் பெற்றனவாம். மற்றும் அவர்கள் கீழ் மேல் எழு பிறவியிலும் நரகம், வெம்நரகம், விடியா வெந்நரகம் சேர்தலினின்றும் மாறினர் என்றும் பலன் கூறுகின்ருர். "செடியார் நோய்கள் எல்லாம் தூந்து எமா கீழ்மேல் எழுபிறப்பும் விடியா வெந்நரகத்து என்றும் சேர்தல் மாறினரே." (2-6-7) தன்னைச் சேர்ந்தார் பெற்ற பேற்றிற்கு ஆழ்வார் மகிழ்தல் இங்குக் கூறப் பெறுகின்றது;

இன்னெரு திருவாய் மொழியில் புலவர்களை மானிடம் பாடவேண்டாமென விடுத்த வேண்டுதல் நிறைவேருதுபோயினும், தான் இறைவனையே பாடிப் பரவும் பேறு பெற்றமைக்கு மகிழ்நது பாடுகின்ருர். 'நான் ஓர் குறைவு இலனே' என்றும், 'மனத்துப் பரிவு இலனே' என்றும இடம், துயர், துன்பம், அல்லல், துக்கம, தளர்வு, கேடு இவை இறையுமிலன என்றும் பத்துப் பாசுரஙகளில் பாடுகின்ருர். இதற்கு அவர் கூறும் காரணம் மாயனைக் – கண்ணனைத் – தாள் பற்றியமை தான. அவன் புகழ் ஏததியும் பாடியும் ஆடியும் அனுபவிக்கப் பெற்றமைக்கு மகிழ்கின்ருர். அவன் புகழ்தான் எததகையது எனின் அதனை விளக்கும் ஒரு பாடல் காண்போம்.

துன்பமற்றதும் ஒளியுடையதுமான பரம பதத்தில் நிற்கும் தன் தன்மை சிறிதும் குறையாதவாறு துயர் நிறைந்த மனிதர் பிறவியில் பிறந்து கண்கட்குப் புலப்படுமாறு வந்து அடியார்களை அழகாலே நோவு படுத்தியும பகைவர்களை ஆயுதத்தாலே நோவு படுத்தியும் தன் தெய்வத் தன்மையை இவ்வுலகத்தில் புகும்படி செய்கின்ற இறைவன் – துயரமில்சீர்க் கண்ணன் – மாயன் – அவனது நற்குணப் புகழை அநுபவித்த யான் ஒரு துன்பமும் இல்லாதவன் ஆனேன் என்று பாடுகின்ருர். அடியவர்க்கு உதவ இவவுலகில் அவதரித்ததே அவன் புகழ் என்றும் கருத வேண்டியது.

"துயரில் சுடர்ஒளி தன்னுடைச் சோதி
நின்ற வண்ணம் நிற்கவே
துயரில் மலியும் மனிசர் பிறவியில்
தோன்றி, கண்காண வநது
துயரங்கள் செய்து தன் தெய்வநிலை உலகில்
புகஉய்க்கும் அம்மான்
துயரம் இலசீர்க் கண்ணன், மாயன் புகழ்துற்ற
யான் ஓர் துன்பம் இலனே." (3-10-6)

(தொடரும்)

முக்கவி கண்ட காப்பியம்

ஸ்ரீ. T. G. அனந்த சுப்ரமணியம், திருப்பதி.

(காபேயன்)

"ஆரண்ய காண்டம்"

—⁂O⁂—

(முன் இதழின் தொடர்ச்சி)

தண்ணீரை எடுத்துக்கொண்டு முனிவரிடம் அனஸூயை கொடுத்தாள். முனிவர் ஆசமனம் செய்து விட்டு பிரஸன்னமாகி 'இந்தத் தண்ணீர் எங்கு கிடைத்தது'? என்று வினவினார்.

'பிரபுவே! தங்கள் தபோ மஹிமையாலும், பரமேச்வரனின் அருளாலும் கங்காதேவி பிரசன்னமாகியுள்ளாள்' என்று கூறினாள்.

முனிவர், நான் நேரில் பார்த்தால்தான் எனக்கு நம்பிக்கை ஏற்படும் என்று கூறி அனஸூயையுடன் அங்கே வந்தார். பள்ளத்தில் கங்கை தண்ணீராகக் காட்சியளித்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டு பிரார்த்தித்தார்.

கங்கை இருவரிடமும் விடை பெற்றுக் கொள்ள விரும்பினாள்.

அனஸூயை கங்கையைப் பார்த்து 'தேவி! தாங்கள் இங்கேயே தங்கி எங்களை அனுக்கிரஹிக்க வேண்டும்' என்று பிரார்த்திக்கிறாள்.

கங்கை அனஸூயையைப் பார்த்துக் கேட்கிறாள் ''தேவி! தாங்கள் சிவனுக்கும், முனிவருக்கும் செய்த பூஜை, சேவை இவைகளின் ஒரு வருஷ பலனை எனக்குக் கொடுத்தால் நான் இங்கேயே தங்கி விடுகிறேன்'' என்றாள்.

அனஸூயை கொஞ்சமும் தயங்காமல் ஒரு வருஷ பலனைத் தந்தாள். கங்கை அங்கேயே தங்கிவிட்டாள், அந்த கங்கைக்கு அன்றைய தினத்திலிருந்து ''மந்தாகினீ'' (मन्दाकिनी) என்ற பெயர் ஏற்பட்டது.

"शंकरार्चनसंभूतं फलं वर्षस्य यच्छसि ।
स्वामिनश्च तदा स्थास्ये देवानामुपकारणात् ॥
तस्माच्च यदि लोकस्य हिताय तत्प्रयच्छसि ।
तर्ह्यहं स्थिरतां यास्ये यदि कल्याणमिच्छसि ॥"

[शिव पु. रु. स 4. 45. 46]

இத்தகைய பெருமைவாய்ந்த அனஸூயையை வணங்கி நின்றாள் சீதை. அனஸூயை பழுத்த பதிவ்ரதையானதால் சீதையின் அழகைக் கண்டு பிரமித்து, தன்னிடமிருந்த ஆபரணங்களையும், அணிகளையும் பட்டாடைகளையும் அணிவித்து, ஆசிகூறி, அவளுக்கு நல்ல உபதேசங்களைச் செய்கிறாள். இம்மாதிரி அனஸூயை சீதைக்குச் செய்தது உலக இயற்கை. புதுமணப் பெண்ணுக்கு வயோதிகர்கள் தன் நகைகளைப் போட்டு அழகு பார்ப்பதும், அப்பெண்ணுக்கு நல்லுரைகள் கூறுவதும் உலகவழக்கு.

"अमित दानि भर्ता वैदेही अधम सो नारि जो सेव न तेही ।
धीरज धर्म मित्र अरु नारी आपद काल परिखि अहिं चारी ॥"

பெண்களுக்கு எல்லாவிதமான சுகங்களையும், பெருமைகளையும் கொடுக்கக் கூடியவன்

கணவனே! ஆகையால் எவளொருவள் பதிக்குச் சேவை செய்யவில்லையோ அவள் பதிதையாகிறுள். சிவபுராணத்தில் கீழ் வருமாறு கூறப்பட்டுள்ளது,

"मितं ददाति जनको मितं भ्राता मितं सुतः ।
अमितस्य हि दातारं भर्तारं पूजयेत्सदा ॥"

தகப்பஞர் கொஞ்சம் கொடுப்பார்: பிள்ளையும், சகோதரனும் அளவாகக் கொடுப்பார்கள். கணவன் மாத்திரம் அளவில்லா அன்பைக் கொடுப்பான். ஆகையால் கணவனை பூஜிப்பது விசேஷமாகும். மேலும் பிரஸ்தாவரத்ஞகரத்தில்

"आपत्सु मित्रं जानीयात् युद्धे शूरं धने शुचिम् ।
भार्यां क्षीणेषु वित्तेषु व्यसनेषु च बान्धवम् ॥"

ஆபத்காலத்தில் நண்பனையும், யுத்த நேரத்தில் சூரனையும், நலலபொருள் இருக்கும் சமயத்தில் நேர்மையையும், ஏழ்மை நேரத்தில் மனைவியையும், கஷ்ட காலத்தில் உறவினர்களையும் புரிந்துக் கொள்ளலாம்.

மகாபாரத வனபர்வ நளதமயந்தி ஸம்வாதத்தில்,

"न च भार्या समं किञ्चिद्विद्यते भिषजां मतम् ।
औषधं सर्वदुःखेषु सत्यमेतद्ब्रवीमि ते ॥"

மனிதனின் வியாதியைத் தீர்ப்பதற்கு வைத்யனைவிட மனைவியின் அன்புச்சேவையே மருந்தாகும் என்று கூறப்பட்டுள்ளது. போஜசம்புவில் இராமன் ஸீதையைப் பற்றிக் கூறுகிறுன்.

"**आद्यौ सिद्धौषधिरिव हिता**" என்று உடல் ரோகமானுலும், மனேவியாதியானுலும் ஓர் உயர்ந்த மூலிகையாக எனக்கு நன்மையைச் செய்வாள்''.

பாகவதம் கீழ்வருமாறு கூறுகின்றது :

"दुःशीलो दुर्भगो वृद्धो जडो रोग्यधनोऽपि वा ।
पतिः स्त्रीभिर्न हातव्यो लोकेप्सुभिरपातकी ॥"

உண்மையான பெண்ணுக இருந்தால் கணவன கெட்டவனுக இருந்தாலும், முட்டாளாக இருந்தாலும், ரோகியாக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் அவனை நிந்திக்கக் கூடாது.

இந்த கருத்தை துளசிதாஸர் கீழ்வருமாறு கூறுகிறார்:

"बृद्ध रोगवस जड़ धनहीना ।
अंध बधिर क्रोधी अति दीना ॥
ऐसे हु पति कर किए अपमाना ।
नारि पाव जमपुर दुख नाना ॥"

மேலும் சிவபுராண பார்வதீ காண்டத்தில்

"अकुष्टापि न चाक्रोशेत् प्रसीदेत्ताडितापि च ।
क्लीबं वा दुरवस्थं च व्याधितं वृद्धमेव च ।
सुखितं दुःखितं वापि पतिमेकं न लङ्घयेत् ॥"

என்று கூறப்படுகின்றது. காளிதாஸனும் சாகுந்தலத்தில் கூறுகிறுன். கண்வர் சகுந்தலைக்கு உபதேசிக்கிறுர்.

"भर्तुर्विप्रकृतापि रोषणतया मा स्म प्रतीपं गमः ॥"

இதில் எவ்வளவு அழகாக மகாகவி உலகத்தைத் தெரிந்து வைத்துள்ளான் என்று தெரிகின்றது.

பெண்களின் பண்பைப் பற்றி வால்மீகி

"स्त्रीणां आर्यस्वभावानां परमं दैवतं पतिः ॥"

என்று கூறுகின்றுர்;

அதற்கு துளசிதாஸர்

"एकै धर्म एक व्रत नेमा काय वचन मन पति पदप्रेम"

என்று கூறுகிறுர் ;

மகாநிர்வாண தந்த்ரம் கூறுகிறது:

"भर्तैव योषितां तीर्थं तपो दानं व्रतं गुरुः ।
तस्मात्सर्वात्मना नारी पतिसेवां समाचरेत् ॥"

பெண்களுக்குக் கணவனைத் தவிர எந்தவித புண்ய ஸ்தலங்களும், தீர்த்தங்களும், தபஸ்ஸுகளும, தான, தர்ம, விரதங்களும் தேவையில்லை: அவனுடைய சேவையே எல்லாவற்றையும் கொடுத்துவிடும்—என்பதை சிவபுராணமும் கூறுகிறது:

"भर्ता देवो गुरुर्भर्ता धर्मतीर्थ व्रतानि च ।
तस्मात्सर्वं परित्यज्य पतिमेकं समर्चयेत् ॥"

சிவபுராணத்தில் பெண்களைப்பற்றி நான்கு விதமாகக் கூறப்பட்டுள்ளது இவ்விபரத்தை பரமேச்வரன், பார்வதிக்குக் கூறுகிறார்.

"चतुर्विधास्ताः कथिता नार्यो देवि पतिव्रताः ।
उत्तमादि विभेदेन स्मरतां पापहारिणः ॥
उत्तमा मध्यमा चैव निकृष्टाति निकृष्टिका ।
ब्रुवे तासां लक्षणानि सावधानतया शृणु ॥
स्वप्नेऽपि यन्मनो नित्यं स्वपतिं पश्यति ध्रुवम् ।
नान्यं परपतिं भद्रे उत्तमा सा प्रकीर्तिता ॥
या पितृभ्रातृसुतवत् परं पश्यति सद्धिया ।
मध्यमा सा हि कथिता शैलजे वै पतिव्रता ॥
बुद्ध्वा स्वधर्ममनसा व्यभिचारं करोति च ।
निकृष्टा कथिता सा हि सुचरित्रा च पार्वति ॥"
पत्युः कुलस्य च भयात् व्यभिचारं करोति च ।
पतिव्रताधमा सा हि कथिता पूर्वसूरिभिः ॥
या भर्तारं समुत्सृज्य रहश्चरति दुर्मतिः ॥"
[शिव. पु. रु. स २, तृतीयखण्डे अ-52]

பதிவ்ரதைகள் நான்கு-வகைப்படுகின்றனர் உத்தமா, மத்யமா, நிக்ருஷ்டா, அதிநிகிருஷ்டா (அதமா) என்று.

எவளொருவள் கனவில் கூட கணவனையே காண்கிறாளோ அவள் உத்தமமானவள்.

எவளொருவள் பிற புருஷனைப் பார்க்கும் பொழுது சகோதரதகன்மையோடு பார்க்கிறாளோ அவள் மத்யமம் (பொதுவாக கல்யாணமான பெணகள் பிற புருஷர்களைப் பாாக்கக்கூடாது என்பது கருத்து.)

எவளொருவள் தன் தர்மத்தை அறிந்தும் கூட நல்லவளாக இருநதாலும்கூட விபசாரம செய்கிறாளோ அவள் நிக்ருஷ்டை யாகிறாள்.

எவளொருவள் தன் கணவனுக்குத் தெரியாமல் கள்ளக் காதலைச் செய்கிறாளோ அவள் அதமையாக (அதிநிக்ருஷ்டை) ஆகிறாள் (ஆனால் புருஷனுக்குத் தெரிந்து விபசாரம் செய்யலாம் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது.)

"पुत्राच्छतगुणं स्नेहाद्राजानं च भयादथ ।
आराधयेत् पतिं शौरिं या पश्येत् सा पतिव्रता ॥
कार्ये दासी रतौ वेश्या भोजने जननी समा ।
विपत्सु मन्त्रिणी भर्तुः सा च भार्या पतिव्रता ॥
भर्तुराज्ञां न लङ्घयेद्या मनोवाक्कायकर्मभिः ।
भुक्ते पतौ तदा चात्ति सा च भार्या पतिव्रता ॥"
"यस्यां यस्यां तु शय्यायां पतिस्स्वपिति यत्नतः ।
तत्र तत्र च सा भर्तुरर्चां चरति नित्यशः ॥
नैशमत्सरतां याति न कार्पण्यं न मानिनी ।
मानेऽमाने समानत्वं या पश्येत् सा पतिव्रता ॥"
सुवेषं या नरं दृष्ट्वा भ्रातरं पितरं सुतम् ।
मन्यते च परं साध्वी सा च भार्या पतिव्रता ॥"

என்று பாத்மபுராணம் பதிவ்ரதைகளின் இலக்கணத்தை சிருஷ்டி காண்டத்தில் கூறுகிறது.

பிள்ளையினிடத்தில் வைத்திருக்கும் அன்பைக காட்டிலும், கணவனிடத்தில் அதிகம

இருக்க வேண்டும். அதேபோல் அரசனிடத்தில் எவ்வித பயம் ஏறபடுமோ அவ்வித பயம இருக்கவேண்டும். கணவனை தெய்வமாக வழிபடவேண்டும். கணவனின பணிவிடையில் பணிப் பெணணுகவும், ஊடலில் தாசியாகவும், உணவில் தாயைப்போலவும், ஆபத்காலத்தில் அமைச்சர் போலவும், எவளொருவள் தன கணவனிடத்தில் இருக்கிருளோ அவளே பதிவ்ரதை.

எவளொருவள கணவனின் கட்டளையை மனம், வாக், காயம் இம்மூன்ருலும் தாணடாமலும், கணவன் உண்டபின் உண்ணுகிறவளும், எந்தெந்த இடத்தில் கணவன் உறங்குகிருனே அங்கே படுத்து உறங்குபவளும், கணவனிடத்தில் எந்தவிதமான கோபம், தாபம், பொருமை முதலிய கெட்ட குணங்களைக் கொள்ளாமலும், சுகதுக்கத்தைச் சமமாகப் பார்த்து நடபபவளும், நல்ல அழகான ஆணமகனைப் பார்க்கும் பொழுது பிள்ளையாகவும் சகோதரனுகவும் நினைப்பவளும்தான் பதிவ்ரதை என்ற பதத்திற்கு பொருளாவாள்.

ச்ருதி, ஸ்ம்ருதிகளில் கூறியதைக் காட்டிலும், வேறெங்கும் பதிவ்ரதையின் தர்மததைக் கூறவில்லை என்று சிவபுராணம் கூறுகிறது.

"महान्पतिव्रता धर्मश्श्रुतिस्मृतिषु नोदितः ।
यथैव वर्ण्यते श्रेष्ठो न तथान्योऽस्ति निश्चितम् ॥"

"सहज अपावनि नारि पति सेवत सुभगति लहइ ।
जसु गावत श्रुति चारि अजहुं तुलसि काहरि हि प्रिय॥
सुनु सीता तव नाम सुमिरि नारि पतिव्रत करहिं ।
तोहि प्रान प्रिय राम कहि उँ कथा संसार हित ॥"

மேலும் அனஸூயை கூறுகிருள். "சீதை! பெண ஜென்மம் அபவித்ரமானது. ஆகையால் பெண்கள் தன் கணவனுக்குப் பணிவிடைகள் செய்து மேன்மையை அடைய வேண்டும், என்று வேத, புராண, இதிகாசங்கள்கூறுகினறன ஆகையால் இராமனுடன் கூட இருந்து பணிவிடை செய்வதே மேன்மையைத் தரும்" என்று.

இவ்விஷயத்தை பாத்மபுராண பாதாள கணடத்தில் காணலாம்.

"स्त्रीणां पतिव्रतानां तु पतिरेव हि दैवतम् ।
स तु पूज्यो विष्णुभक्त्या मनोवाक्काय कर्मभिः ॥
स्त्रीणां अथाधिकतया विष्णोराराधनादिकम् ।
पतिप्रियरतानां च श्रुतिरेषा सनातनी ॥"

அதாவது பெண்களுககுக் கணவன் தெய்வம். விஷ்ணுவினிடத்தில் எவ்வளவு பக்தி இருக்கிறதோ அவ்வளவு பக்தியுடன் கணவனைப் பூசிக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது.

அனஸூயை சீதையினிடம், "துளசி எவ்விதம் நாராயணனுக்குப் பிரியமானவளாக ஆனுளோ அவ்விதம் நீ இராமனிடத்தில் பிரியமாய் இருக்கவேண்டும்" என்று கூறுவதாகய துளசிதாஸர் தன் தோஹாவில் கூறுகின்ருர்.

(தொடரும்)

இந்து சமயக் கையேடு*

திரு அ. நடராஜன், திருப்பதி.

★ ★ ★

அறிமுகம்

உலகில் இன்று வழக்கில் இருந்துவரும் மிக முக்கியமான சமயங்களுள் ஒன்று இந்து மதம. சநாதன தர்மம் என்று அழைக்கப் பெறும் இதுவே மிகவும் தொன்மையான தாகும். மதத்தைப்பற்றிய எந்த ஆராய்சசி யும், அதன் புனித நூல்களில் காணப்படு கின்றனவும், அதன் பிரதான ஆசிரியர் களினுல் விரிதது விளக்கப்பட்டிருப்பனவும, அதைச் சார்ந்த ஞானிகள், முனிவர்கள் மற்றும சித்தர்கள் ஆகியோர் உணர்ந் தறிந்து கொண்டுள்ளனவுமான அதன் மிக நுட்பமான கூறுபாடுகளேயும், உயரிய அம்சங் களேயும் கணக்கில் எடுத்துக் கொண்டா லன்றி, முழுமை பெற்றதாக ஆகமுடியாது. இந்துமதம் ஒருவகையில் சமய ஆராய்ச் சிக்குத் தேவையானவை அனைத்தையுமே வழங்குகிறது. இந்து மதம் எந்நிலேக்கும் பொருந்துகிற, எல்லாவற்யைும் தன்னகத்தே கொண்ட, மிகப் பரந்த ஒரு பொது மதம் என சொல்லிக் கொள்ள முடியும்.

இது ஒரு வரலாற்றுச் சமயமன்று; வரலாற்று மனிதர் எவரும் நிறுவாத ஒரு மதம். இதன் அடிப்படை எஞ்ஞான்றும் இருந்து வருவது, நித்தியமானது. வர லாற்றுச் சமயங்களின் கொள்கைகளும் கோட்பாடுகளும் அவற்றை நிறுவிய மகான் கள் கண்டு கொண்டு எடுத்துரைத்த உணமை களே அடிப்படையாகக் கொண்டனவாகும். இநது மதமோ, எஞ்ஞான்றும் இருந்துவரும், நித்தியமான வேதங்களே ஆதாரமாகக் கொணடிருக்கின்றது; ஞானிகளுக்கும் முனி வர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு, ஸ்மிருதி களினுல் நிருபிக்கப்பட்டு, தலேமுறை தலேமுறையாகக் கற்பிக்கப்பட்டு வருபவை இவை. வேதம் கடவுளின் சொல்லே ஆதலால் அதுவும் கடவுளே ஆகும். எனவே, அது அழி வில்லாதது, நித்தியமானது. அபௌருஷேய மானது, அதாவது, புருஷனுல் — அல்லது மனிதனுல் — ஏற்படுத்தப்படாதது. இந்து மதம் முதலும் முடிவும் இல்லாத சநாதன (பழமையான) சமயம். வேதங்கள், வேதாங் கங்கள், ஸமிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், ஆழ்வார்களின் பாசுரஙகள், நாயன்மார்களின் பாடல்கள் ஆகியவற்ருலான ஒரே தொடர்ச்சியான தெய்வீக உண்மை. மாறும் நிலேமைகளுக் கேற்ப அமையும் நிரந்தரமான ஆன்மீக உண்மைகளேப் பற்றியது அது. எனவே, முக்கியமான அடிப்படைக் கொள்கைகளேப் பொறுத்தவரை அது நிலேயானது, மாருதது, ஆனுல், சடங்குகள், கருமங்கள் போன்ற முக்கியமல்லாதனவற்றில் அது நெகழ்ச்சி யுடன் கூடியது.

இந்து மதம் என்பது அயல் நாட்டினர் அளித்த பெயர்; தெளிவில்லாதது. ஆகவே அதைக்காட்டிலும் சநாதன தர்மம் (பழைய மதம்) என்னும் பெயரே சிறந்தது; நிறைவும்

---

* திருமலே - திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள 'A Hand-Book of Hindu Religion' என்னும நூலின தமிழாக்கம்.

முழுமையும் உடையது. எனினும், இந்து மதம் என்னும் பெயர் நெடுங்காலமாகப் புழக்கத்திற்கு வந்துவிட்டிருக்கும் பெயராகும். தர்மம் அல்லது மதவொழுக்கம் என்பது தனிப்பட்ட முறையிலும் சரி, சமூக நோக்கிலும் சரி, அன்றாட வாழ்வில் எடுத்துக்காட்டாக விளங்கிவரும் அல்லது விளங்க வேண்டிய நேர்மையையும், மோட்ச தர்மத்தையும், அதாவது வாழ்க்கையின் இடர்களினின்றும் கிடைக்கும் விடுதலையின் இயல்பையும் குறிக்கிறது. ஆக அது ஒரு வாழ்க்கையின் தத்துவம் மட்டுமின்றி, ஒரு வாழ்க்கை முறையுமாகும் தத்துவம் அல்லது கொள்கை, நடைமுறை என்னும் இரண்டையும் கொண்டது அது. இந்து மதத்தின் பிரதான ஆதாரம் அல்லது பிரமாணம் வேதம். செயல் முறையில் அதைப் புரிந்து கொள்வதற்கு உதவியாக இருப்பவை ஸ்மிருதிகள் போன்ற ஏனைய புனித நூல்கள். ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வவேதம் என்று நான்கு வேதங்கள் உள்ளன. ஒவ்வொரு வேதத்திலும் மந்திரம், பிராம்மணம், உபநிஷத்து என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன. மந்திரங்கள், பிராம்மணங்கள் ஆகியவற்றின் உட்கருத்தை அறிந்தவன் 'மந்திரங் கண்டோன்' ஆகின்றான். உள்ளேயும் வெளியேயும் உள்ள இயற்கையின் மீது அவன் ஆதிக்கம் பெறுகிறான். வேதங்கள் மனித ஜாதியின் குழந்தைப் பருவத்தைச் சேர்ந்தவை என்று சொல்வது தவறு. 'உண்மை (ஸத்) அல்லது கடவுள் ஒன்றே, ஞானிகள் அதைப் பலவாறாகக் குறிப்பிடுகின்றனர் என்னும் பழமையான வேத வாக்கியம் ஒன்றில் இந்து மதத்தின் ஆதார கருதியும் எல்லா நிலைகளுக்கும் பொருந்தும் அதன் தன்மையும் அடங்கியுள்ளன. உபநிஷத்துக்கள் அல்லது வேதாந்தம் இந்து மதத்தின் மிக உயரிய போதனைகளாகும்; பிரம்ம வித்தை என்று அழைக்கப் பெறுவது எதை அறிந்து கொண்டால் எல்லாவற்றையும் அறிந்ததாக ஆகுமோ அந்தப் பிரம்மத்தைப் பற்றிய அறிவைக்கொண்டது. வாழ்வு, சாவு இரண்டின் ஆறுதலும் அவையே. வேதங்களின் அறிவு அனைத்தும் பிரணவம் அல்லது ஓம் என்பதில் அடங்கியுள்ளன. பிரம்மத்தைக் குறித்த வேதாந்த ஞானத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. பொருளாதார இலட்சியங்களையும் இன்பக் குறிக்கோள்களையும் பற்றி வேதங்கள் குறிப்பிட்டாலும், மிகச்சிரிய குறிக்கோள் மோட்சம் அல்லது பிரம்மத்தை அறிதல் என்பதே ஆகும். எனவேதான், அது பிரம்ம வித்தை எனப்படுகிறது. துணைகள் அல்லது அங்கங்கள் இல்லாமல் வேதத்தை அறிந்து கொள்ளமுடியாது. சிட்சை, வியாகரணம் (இலக்கணம்), ஜ்யோதிஷம் (சோதிடம்) போன்ற ஆறு அங்கங்கள் இருக்கின்றன.

மனுஸ்மிருதி போன்ற ஸ்மிருதிகள் இந்துக்களின் அறவியல் குறித்து அவர்களது தனிப்பட்ட முறையிலும் சமூக அம்சங்களிலும் விவரிக்கின்றன. உரிமைகளையும் சலுகைகளையும்விடக் கடமைகளையும் ஒழுக்கங்களையும் பற்றியே அவை குறிப்பிடுகின்றன. எங்கும், எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய உண்மை, அகிம்சை போன்ற அடிப்படையான அறவியற்கருத்துக்கள் என்றும், குறிப்பிட்ட சில காலங்களுக்கு மட்டுமே பொருந்தும் யுக தர்மங்கள் அல்லது அந்தந்தக் காலத்திற்குரிய கடமைகள் எனறும் இருக்கின்றன. பராசர முனிவரின் ஸ்மிருதி இக் கலியுகத்திற்காக ஏற்பட்டதாகும். இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்கள் இரண்டும் இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் என்னும் இரண்டு அவதாரங்களை விரித்துக் கூறுகின்றன. நேர்மையை மீண்டும் நிலை நிறுத்தவும் தீயதை அழிக்கவும் நெருக்கடியான சமயங்களில் கடவுள் அவதரிக்கிறார்.

அத்தகைய தண்டனைகூட இறுதியில் தீயோரைத் திருத்தி நல்வழிப்படுத்துவதற்குத்தான். பதினெட்டுப் புராணங்கள் உள்ளன. முக்கியமானவை விஷ்ணு புராணமும் பாகவதமுமாகும். அவை சிறப்பாகப் பிரபஞ்சத்தின் தோற்றம், இருத்தல், அழிவு ஆகியவை குறித்த ஒழுங்கான விவரணங்கள். அவற்றின் பிரதான லட்சியம, ரட்சகர் அல்லது முக்தர்களை (அதாவது, சம்சாரத்திலிருந்து விடுதலை பெற்றவர்களை) உண்டாக்குபவர் என்னும் கடவுளின் அதிகாரித்துவ நம் பொறுப்பை எடுத்துக்காட்டுவதுதான். மனிதனை அவனது பாவததினின்றும் மீட்பதற்காக கடவுள் அர்ச்சை, அதாவது, விக்ரகம் அல்லது மூர்த்தி உருவத்தில் மனித உலகிற்கு இறங்கிவரும் முறையை ஆகமங்கள் விளக்குகின்றன. நாயன்மார்களின் பாடல்களும், ஆழ்வார்களின் பாசுரங்களும் கடவுளின் மீட்புககருணையை வேண்டி, கோயிலிலுள்ள அர்ச்சை அல்லது மூர்த்தி உருவத்தைச் சிறப்பாகப் போற்றிப் பாடப் பெற்றவையேயாகும்.

வேதங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்கள் ஆகியோரின் அனுபவங்கள் ஆகியவற்றைப் படித்தால், சமயத்தின் உள்ளுண்மையை, அதாவது, மனிதனைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தும் பொருட்டு, கடவுள் மனிதனின் நிலைக்குப் படிப்படியாக இறங்கி வருவதைக் காணமுடிகிறது. வேதங்களில் பிரம்மம் என்றழைக்கப்படுவது வேதத்தில் அந்தர்யாமியாகவும், ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் ஈசுவரனாகவும், இதிகாசங்களில் அவதாரமாகவும், ஆகமங்கள், ஆழ்வார்களின் பாசுரங்கள், நாயன்மார்களின் பாடல்கள் ஆகியவற்றில் அர்ச்சை அல்லது விக்கிரகம் என்பதாகவும் ஆகின்றது. கடவுளின் அருளினால் மனிதன் மிருக நிலையிலிருந்தும் மனித நிலையினின்றும் ஆன்மீக நிலைகளின் வழியாக முக்தி என்னும் தெய்வீக நிலையை அடைகிறான். ஆகவே, இந்து சமய நூல்கள் எல்லாவற்றிலும், வெவ்வேறு வகை நிலைகளுக்கும் ஆட்களுக்கும் தக்கபடி இருக்கும் ஓர் ஆன்மீக நோக்கத்தின் ஒருமையைக் காண முடிகிறது.

வேதாந்தம் எனப்படுவதில், இந்த ஆன்மிக நோக்கத்தின் ஒருமையையே இந்து மதம் தத்துவவியல் முறையில் (மெய்ப்பொருளியல் முறையில்) விரித்துரைக்கின்றது. தரிசனங்கள் எனப்படும மெய்விளக்கக் கோட்பாடுகள் அல்லது தத்துவவியற் கொள்கைகள் ஆறும், ஒரே குறிக்கோளுடன், அதாவது, வாழ்வின் துயர்களை நீக்கி மோட்சம் அல்லது வீடு பெற வேண்டும் என்னும் ஒரே நோக்கத்துடன் வெவ்வேறு ரிஷிகளினால் இயற்றப்பட்டவையாகும். நியாய—வைசேஷிகம் எனப்படுவது தர்க்கம் அல்லது பிரமாணங்களும் அவற்றின் வாழ்க்கைக் கூறுகளும் என்பதைப் பற்றியதாகும். சாங்கிய—யோகம் எனப்படுவது புருஷன், பிரகிருதி. பிரகிருதியினின்றும் புருஷன் விடுதலை பெறும் வழி முறை ஆகியவற்றை ஆராய்வதாகும். பூர்வ மீமாம்சம் தர்மத்தின் அறவியல் அம்சத்தை வலியுறுத்துவதாகும். உத்திர மீமாம்சம் அல்லது வேதாநதம், எதை அறிந்து கொண்டால் எலலாவற்றையும் அறிந்ததாக ஆகுமோ அந்தப் பிரம்மத்தைப் பற்றிய தலையாய தத்துவத்தைக் குறிக்கின்றது.

(தொடரும்)

சந்தாதாரர்களுக்கு ஓர் விண்ணப்பம்

* * *

ஸப்தகிரி மாத இதழ் ஆண்டு சந்தா ரூ. 5/—


கீழ்க்காணும் சநதாதார்களின் சந்தாக்காலம் புதியகணககின்படி 31-7-73 ல் முடிவடைவதினால், அவர்கள் இந்த விஷயததைக கவனித்து கீழ்க்காணும்படி தங்களுடைய தொகையை எங்களுக்கு மணியார்டர் மூலமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம. மணியார்டர் கூப்பனில் கீழ்க்கண்ட எண்கள் கொணட சந்தாதாரர்கள் முழு விலாசத்துடன் விரைவாக தங்களுடைய சந்தாக்களை செலுத்தாவிடில், அவர்களுககு மாத இதழ் அனுப்பமுடியாது.

T2	5-00	T203	5-00	T562	5-00	T864	5-00	T1155	5-00	T1516	5-00
T5	5-00	T205	5-00	T695	5-00	T876	5-00	T1160	5-00	T1517	5-00
T9	5-00	T208	5-00	T700	5-00	T880	5-00	T1173	5-00	T1518	5-00
T59	5-00	T211	5-00	T701	5-00	T890	5-00	T1324	5-00	T1522	5-00
T63	5-00	T215	5-00	T719	5-00	T901	5-00	T1357	5-00	T1523	5-00
T116	5-00	T243	5-00	T721	4-75	T1078	5-00	T1364	5-00	T1524	5-00
T150	5-00	T265	5-00	T731	5-00	T1098	5-00	T1375	5-00	T1525	5-00
T160	5-00	T268	5-00	T741	4-75	T1111	5-00	T1380	5-00	T1526	5-00
T161	5-00	T280	5-00	T743	5-00	T1118	5-00	T1385	5-00	T1527	5-00
T177	5-00	T283	5-00	T759	5-00	T1119	4-75	T1387	5-00	T1528	5-00
T178	4-75	T285	5-00	T760	4-75	T1124	5-00	T1389	4-75	T1529	5-00
T185	5-00	T309	5-00	T772	5-00	T1128	4-75	T1391	5-00	T1530	5-00
T187	5-00	T310	5-00	T841	5-00	T1130	5-00	T1398	5-00	T1530A	5-00
T189	5-00	T320	5-00	T842	5-00	T1132	5-00	T1412	5-00	T1531	5-00
T196	5-00	T389	5-00	T845	5-00	T1135	5-00	T1513	5-00	T1560	5-00
T197	5-00	T391	5-00	T847	5-00	T1144	5-00	T1515	5-00	T1636	4-92
T198	5-00	T485	5-00								

மாத இதழுக்குச் சம்பநதப்பட்ட பணத்தை, மணியார்டர் மூலமாக, ''ஆசிரியர், தி. தி. தேவஸ்தானம், திருப்பதி. (A. P)'' என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். செக் மூலமாகவோ, அல்லது தவறுதலான முகவரிக்கோ அனுப்பும்படியான பணத்தைப் பற்றிய விபரங்களுக்கு அலுவலகம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது என்று அறிவிக்கப் படுகிறது.

ஆசிரியர்:

EDITED AND PUBLISHED ON BEHALF OF THE T. T. DEVASTHANAMS BY K. SUBBA RAO, M.A. AND PRINTED AT T. T. D. PRESS BY M. VIJAYAKUMAR REDDY, MANAGER, T. T. D. PRESS, TIRUPATI.



Gogarbham Dam, Tirumala.